222



என்பதோ என்றது என்று சொல்லப்படுவதோவென்னும் பொருடோன்றுதலில்லாத வாய்த்தாளென்னுஞ் சொல்லுணர்த்திய செய்கன்றியைத் தானும் உணர்த்திப் பிரிவிலசைநிலையாய் நின்றது. இஃது *"ஆக வாக வென்ப தென்னு-மாவயின் மூன்றும் பிரிவி லசைநிலை" என்னுஞ் சூத்திரத்து என்ப என்பதற்கு உதாரணமாகக்காட்டினும்; அதனுனுணர்க. ஏனையவும் இவ்வாறேகொள்க.

குறியின்றிப் * * * துறந்ததை—எ-து, தன்னறிவு வருத்தத்தே அழுந்தி அழுது ஆராய்ந்த கலஞ்சிறிதாகையினுலே முன்பு செறிந்த வளை தோளினின்றுங் கழன்று விழும்படி இவளை நீ துறந்தது எறிகின்ற திரையொலிக்கின்ற கடற்கரையிலே நின்னுடைய கடியதாகிய தேர் இன்ன காலத்தே வரும் என்னுங் குறிப்பின்றிப் பலநாளும் வருங்காலத்தை மனத்தாலே நோக்கி எதிர்கொண்டாள் என்பதோ? எ - று.

திரையொலியாற் தேரொலி கேட்டற்கு அரிதாகவும் அவ்வொலிகேட்டு எதிர்கொண்டாளென்றுள்.

கான்வர * * * துறந்ததை—எ-து, மூங்கில் தன் நலன் இழத்தற்குக் காரணமான தோள்களிற் கிடந்து விளங்குகின்ற பூண்களை அத்தோள் பொறுத்தலைச் செய்யாமல் மெலிந்து வாணுதல் பசப்புப்பரக்கும்படி இவளை நீ துறந்தது நோக்கினுர்க்குக் காட்சி வரும்படியாகப் பண்ணினதோர் அழகைத் தான்பெறுகின்ற இப்பனித்துறையிலே நியாழத்தே நீ வந்து செய்த நின் வரவு உணர்த்திய குறியிலே தப்பாமல் வந்தாள் என்பதோ? எ - று.

தன்மெலிவு தோள்பொறுமைக்குக் காரணமாய் நின்றது. ஆற்றுளாயென்னும் முதல்வினை நுதல்பசப்பூரவென்னுஞ் சினைவினையோடு முடிந்தது. இவளையென்றது இங்ஙனம் நன்மை செய்தவளையென்றும், நீயென்றது அங்ஙனங் குறைந்தநின்ற நீயென்றும் பொருள் தந்தன.

தாழிசை மூன்றும் பொச்சாப்பென்னும் மெய்ப்பாடு பயந்தன.

அதனால் * * * யளியே—எ-து, வலியினையுடைத்தாகிய நீரையுடைய சேர்ப்பனே! நினக்குச் செய்ந்நன்றிக்கேடு உண்டாம், ஆதலினுலே அதநீர வலியினையுடைய ஞாயிறு சுடுமென்று கரு

* தொல்காப்பியம், சொல்லதிகாரம், இடையியல், ௩௨-ம் சூத்.



தி ஓங்குகின்ற திரை தன் கரையில் நெருங்கின அடும்பை விரைந்தளித்தாற்போல இவளுடைய இறையில்வளை கழன்ற வருத்தத்தையுடைய நோய்தீரும்படி அருளினையாய் வளைந்துகொள்ளெனவனைவுகடாயினுள்; எ - று.

வளைகழல்தல் வெளியாக வருத்தத்தை விளக்குதல்பற்றிச் சுரிதகத்து வளைநெகிழ்தலைக்கூறினுள்.

இதனுற் தலைவற்கு அசைவு பிறந்தது.

இஃது ஒத்தாழிசைக்கலி. (௫௦)

௧௨௮. தோறெந் தருளா தவர்போ னின்று
வாடை *தூக்க வணங்கிய தாழை
யாடுகோட் டிருந்த வசைகடை நாரை
களியிருங் கங்கு னத்துய ரறியா
தளியின்று பிணியின்று விளியாது நரலுங்
கானலஞ் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை யென்றி யாயி
னனவின் வாரா வயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி;

அலந்தாங் கமையலெ னென்றுனைப் பற்றியென்
னலந்தாரா யோவெனத் தொடுப்பேன் போலவுங்
கலந்தாங் கேயென் கவின்பெற முயங்கிப்
புலம்ப லோம்பென வளிப்பான் போலவும்;

முலையிடைத் துயிலு மறந்தீத் தோயென
நிலையழி நெஞ்சத்தே னழுவேன் போலவும்
வலையுறு மயிலின் வருந்தினை பெரிதெனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்;

கோதை கோலா விறைஞ்சி நின்ற
வூதையஞ் சேர்ப்பனை யலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி யாங்கே
பேதையை பெரிதெனத் தெளிப்பான் போலவும்;

* வாடை தூக்க என்றும் பாடம்.

ஆங்கு,

கனவினாற் கண்டேன் றோழி காண்டகக்
கனவின் வந்த கானலஞ் சேர்ப்ப
னனவின் வருதலு முண்டென
வவன்வரா நின்றதென் னரும்பெற லுயிரே.

இது வரைவிடையாற்றாளாய்ச் செல்கின்ற தலைவிய தகவின் கண்டு வினவியதோழிக்கு அவள் 'தான்கண்ட கனவுநிலையுரைத்தது.

(இ - ள்.) தோடுறர் * * * கேளினி—எ-து, வாடைக் காற்று அசைக்கையினாலே வளைந்த தாழையின் அசைகின்ற கொம்பிலே இருந்த அசைந்த நடையினையுடைய நாரை நந் தோளைத் துறந்து நமக்கு அருளாதவனைப்போலே நின்று பெருமையையுடைய கங்குலிடத்து நந் துயரை அறியாமல் நம்மேலளித்தலின்றாய்த் தனக்குக் காமநோயாலே வருத்தமின்றாய் மாறுமற் கூப்பிடுங் கானலையுடைய அழகிய சேர்ப்பினையுடையவனைக் கண்டு கூடினாற்போலே புதிதாக ஓர் அழகினையுடையையானென்று கூறுகின்றாயின் வெளியாக வாராத உறவில்லாதவனைக் கனவிடத்தே கண்டு யான் செய்த காரியத்தை இப்பொழுது கேள்; எ - று.

அல்கரங் * * * போலவும்—எ-து, நின்னைப் பிரிந்த இடத்து வருந்தி உயிர்வாழேனென்று கூறினவனைப் பிடித்துக் கொண்டு நீகொண்ட என் நலத்தை இனித் தாராயென்று 'வளைத்துக்கொள்வேன் போலேயும் அவ்விடத்தே என்னுடைய கழிந்த அழகை யான் பெறும்படி புல்லிக் கூடி இனி வருந்தாதேகொளென்று கூறி என்னையும் அளிப்பான்போலேயும்; எ - று.

முலையிடைத் * * * போலவும்—எ-து, என்னை மறத்தலேயன்றிப் பின்னர் அவசத்தான் முலையிடையிற் றுயிலுந் துயிலையும் மறந்தாயென்றுகூறிப் பழைய தன்மைகெட்ட நெஞ்சத்தையுடையேன் அழுவேன்போலேயும் அதுகண்டு வலையிலே அகப்பட்ட மயில்போலே காவலிலே அகப்பட்டுப் பெரிதும் வருந்தினாயேயென்றுகூறி அடிமுன்னே தன் தலையுறும்படி வணங்குவான் போலேயும்; எ - று.

கோதை * * * போலவும்—எ-து, அங்ஙனம் வணங்குகின்ற ஊதைக்காற்றையுடைய சேர்ப்பனை மாலையே கோலாகக்கொண்டு



அடிப்பேன்போலேயும் அவ்விடத்தே யான் செய்த தப்பு யாதென்று கூறி நடுங்கி நீ பெரிதும் அறியாமையையுடையையென்று தெளிவிப்பான் போலேயும்; எ - று.

இத்தாழிசைகளுள் நெஞ்சினை உறுப்பும் உணர்வும் மறுத்தலுமுடையவாகக் கூறி, எதிர்பெய்துகொண்ட தலைவனுருவும் அம் மூன்றுமுடையவாய்ச் செய்யாமரபின செய்தனவாகக் கூறி, உயர்திணையாகக் கூறியவாறும் பிறவும் உணர்க.

*"கனவு முரித்தா லவ்விடத் தான" என்பதனாற் கனவு கொள்க. முன்னடிப்பணிவான் போலவும் அலைப்பேன் போலவும் என்றாள் முன்னே தன்மனத்து நிகழ்தலுடைமையின். இதுவும் †"மனைவி யுயர்வுங் கிழவோன் பணிவு - நினையுங் காலைப் புலவியுளுரிய" என்பதனாற்கொள்க.

ஆங்கு, அசை.

கனவினாற் * * * துயிரே—எ-து, தோழீ! கனவிடத்தே கண்டேன், அதனாலே என்னுடைய பெறுதற்கரிய உயிர் எனக்குத் தரும்படி கனவிலே வந்த கானலையுடைய அழகிய சேர்ப்பன் வெளியிலே வந்து கூடுதலும் உண்டென்று கருதி அவன் அருளும் எல்லைக்கண்ணே அது நசையாக நின்றது காணெனக் கனவில் நிகழ்ந்தது கூறினாள்; எ - று.

இதனாற் கனவொடுமயங்கலென்னும் மெய்ப்பாடு தலைவிக்குத் தோன்றிற்று.

இஃது ‡"இடைநிலைப்பாட்டு" என்றதனாற் றாழம்பட்ட ஓசையின்றி வந்த இடைநிலைப்பாட்டுப்பெற்று வந்த ஒத்தாழிசைக்கலிப்பா. (கச)

கஉகூ. தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தாற் [போ
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்
லெல்லுறு தெறுகதிர் மடங்கித்தன் கதிர்மாய
நல்லற நெறிநிறீஇ யுலகாண்ட வரசன்பி
னல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா

* தொல்காப்பியம், பொருளதிகாரம், பொருளியல், கூ-ம் சூத்.
† ,, ,, ,, கஉ-ம் ,,
‡ ,, ,, செய்யுளியல், கசஉ-ம் ,,